Registered as a Newspape in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 7-1-1985 திங்கட்கிழமை (ரெத்தாக்ஷி மார்கழி 23) முழக்கம் 166

## சைக்கிள் 'பர்மிட்' விண்ணப்ப பத்திரம் இன்றுமுதல்விநியோகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைக்கிள்களைப் பாவிப்பதற்கு வேண்டிய அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று முதல் குடாநாட்டிலுள்ள பதின்மூன்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மூலம் விநியோகிக்கப்படும். அலுவலக ஊழியர்கள், அத்தியாவசிய சேவை ஊழியர்களுக்கு இதில் முன்னுரிமை வழங்கப்படும். கடந்த சிலவாரங்களாக மோட்டார் வாகன 'பர்மிட்' வழங்கும் வேலைகள் நடைபெற்றதால் சைக்கிள் அனுமதி வேலைகள் பின்போடப்பட்டிருந்தன. கணிசமான அளவுக்கும், அவசியமானவர்களுக்கும் சைக்கிள் அனுமதிப் பத்திரம் வழங்கும் வரை தற்போது சைக்கிள் பாவிக்கும் நடைமுறையிலிருக்கும் ஒழுங்கு முறைகளில் மாற்றமேற்படாதென நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

# ராஜீவ் காந்தி ஜனதிபதிக்கு எழுதிய பதிலுடன் டில்லி தூதுவர் திலகரத்தின கொழும்பு விரைகிறர்!

இலங்கையின் இனப்பிரச்சினையில் முக்கியமான திருப்புமுனையாக அமையுமென எதிர்பார்க்கப்படும் அந்தரங்கமான கடிதமொன்றை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தினவிடம் கையளிக்கார்.

தூதுவர் திலகரத்தின இக்கடிதத்தை ஜனதிபதி ஜெயவர்த்தனவிடம் சமர்ப்பிப்பதற்காக நேற்று புதுடில்லியிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் கைவிடப்பட்ட பின்னர் ஜனதிபதி ஜெயவர்த்தனவினல், பாரதப் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்கான பதில் கடிதமே நேற்று இலங்கைத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. இதனல் திலகரத்தினவின் கொழும்பு விஜயம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இதற்கிடையே தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் இந்தியாவின் இலங்கைத் தூதுவர் பிரதமர் ராஜீவ் காந்தி, திரு ஜி. பார்த்தசாரதி, திரு. ராஜ் கோத்ரா ஆகியோருடன் இரு மணித்தியாலங்களாக இனப்பிரச்சினை பற்றிப் பேசியதாகவும், செவ்வாயன்று பேச்சுக்கள் தொடருமெனவும், சென்னையிலுள்ள முக்கிய வட்டாரங்கள் தெரிவிக்கன.

# வங்காலை கத்தோலிக்க குருவும் மற்றும் 11 பேரும் சுட்டுக்கொலை!

## வண.பிதா பஸ்தியன் சடலம் மர்ம மறைவு; பெண்ணும்கொலை; 8சடலம் ஆஸ்பத்திரியில்!

மன்னரிலுள்ள வங்காலை என்னுமிடத்திலுள்ள புனித அன்னம்மாள் ஆலய பங்குக் குரவரான வண. பிதா மேரி பஸ்தியனும், அவரது குருமனையில் வசித்துவந்த இரண்டு சிறுவர்களும் நேற்று முன்தினமிரவு சீருடையினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டதாகவும், அருகிலுள்ள பாடசாலை வளவுக்குள் வைத்துப் பெண்ணொருவரும், மற்றும் எட்டுப்பேரும் இதே சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொலையுண்டவர்களில் எட்டுப் பேரின் சடலம் மட்டும் இராணுவத்தினரால் மன்னர் ஆஸ்பத்திரியில் நேற்று கையளிக்கப்பட்டது. பங்குக்குரவரின் சடலத்துக்கு என்ன நேர்ந்தது என்று கண்டுபிடிப்பதில் கத்தோலிக்க மதகுருமார் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளனராயினும் தகவல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து நேற்றுக்காலை எட்டு மணிவரை சீருடையினர் இப்பகுதியில் நடத்திய தேடுதலின் போது இம் மரணங்கள் நிகழ்ந்தனவாம்.

கத்தோலிக்க மதகுரு வண பிதா பஸ்தியன் (36) குருமனை நடு மண்டபத்தில்அங்கி அணிந்

—2-ஆம் பக்கம் பார்க்க

### திருப்பலி

வங்காலை குருமனையில் அகால மரணமான பங்குக் குரவர் வண. பிதா மேரி பஸ்தியன் அடிகளுக்காக இறையருள் வேண்டி யாழ் மரியன்னை பேராலயத்தில்

—2-ஆம் பக்கம் பார்க்க

## ஈழத்தமிழர் பிரச்சினையில் முழு இந்தியாவும் கரிசனை

(சென்னை)

''இலங்கையில் தமிழ் மக்களுக்கு உண்டாகியுள்ள பிரச்சினையைப்பிரதமர் திரு.ராஜீவ் காந்தி தமிழ் நாட்டுக்கு மட்டுமே உரிய பிரச்சினையாகக் கருதவில்லை பாரத அரசுக்கும் மக்களுக்கும் உள்ள பிரச்சினையாகவே அவர் கருதுகிறர்.'' என்று மகளிர், சமூக நலத்துறை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் சென்னையில் தனக்களிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினர்.

தமிழக சட்டபேரவைத்தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் இவ்விழாவில் பேசுகையில், 'பிரதமருக்குத் தமிழ் நாட்டு மக்களின் முழு ஒத்துழைப்பும் இருக்கும். இந்திரா காங்கிரஸுக்குக் கிடைத்த

— 2-ஆம் பக்கம் பார்க்க

### பரீட்சார்த்த வெடிகுண்டுகள்

யாழ்நகரில் நேற்றிரவு சில குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன. இயக்கமொன்றைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் குண்டுகளைப் பரீட்சித்துப் பார்த்ததாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## சடலத்தை ஒப்படைக்க ஜனதிபதியிடம் கோரிக்கை

சனிக்கிழமை இரவு பாதுகாப்புப்படையினரால் கொலை செய்யப்பட்ட கத்தோலிக்க மதகுரு வண பிதா மேரி பஸ்தியனின் சடலத்தை யாழ்ப்பாணத்தில் அடக்கம் செய்வதற்குத் தங்களிடம் ஒப்படைக்குமாறு ஜனதிபதி ஜெயவர்த்தனவிடம் யாழ்ப்பாணம் மேற்றிராணியாரும், யாழ் மறைமாவட்ட மதகுருமாரும்

—2-ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மந்திரிசபை விபரம் ஓரிருதினத்தில் வெளிவரும்

தமிழக முதல்வரது அழைப்பின் பேரில் நியூயோர்க் புறப்பட்ட தமிழ்நாடு நிதியமைச்சரும் தலைமைச் செயலரும் நேற்றுகாலை நியூயோர்க் போய் சேர்ந்தனராயினும் முதலமைச்சருடன் இன்னமும் பேசவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

முதல்வரைச் சந்தித்துப் பேசும்வரை அமைச்சரவை பற்றிய முடிவுகளையோ அல்லது தாம் நியூயோர்க்கிலிருந்து புறப்படும் தேதியையோ தெரிவிக்க முடியாதென நெடுஞ்செழியன் நிருபர்களிடம் கூறினர் எல்லாம் நல்லபடியாக முடிந்தால் இரண்டு அல்லது மூன்று நாட்களில் தான் அங்கிருந்து புறப்படலாம் எனவும் கூறினர்.

—2-ஆம் பக்கம் பார்க்க

**வாசகர்கள் கவனத்துக்கு**

பத்திரிகைத் தாள் கட்டுப்பாடு காரணத்தால், தவிர்க்க முடியாத நிலையில்ஈழமுரசு ஒரு தாளில் மட்டுமே நேற்று முதல் வெளிவருகின்றது. ஓரிரு தினங்களில் நிலைமை சீரடைந்து விடும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றேம்.

யாழ். பிரஜைகள் குழு

## ஜனதிபதியை வெள்ளி சந்திக்கும்! எதிரணிப் பேச்சுக்களில் திருப்தி!

(முல்லைத்தீவு)

கடந்த ஐந்து நாட்களாக கொழும்பில் தங்கியிருந்த யாழ் பிரஜைகள் குழுப்பிரமுகர்கள் பிரதமர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், அரசியல் கட்சிப்பிரமுகர்கள் பலரையும் சந்தித்து ஈழத் தமிழர் பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசியபின்னர் நேற்று மாலை முல்லைத்தீவுக்கு வந்து இங்குள்ள அகதிகள் முகாம்களைப் பார்வையிட்டனர்.

பேராசிரியர் கே சிவத்தம்பி சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் சகிதம் முகாம்களுக்கு விஜயம் செய்து அகதிகள்படும் கஷ்டங்களை நேரில் கண்டறிந்தனர்.

பிரஜைகள் குழுவினர் மீண்

—2-ஆம் பக்கம் பார்க்க

அமைச்சர் அத்துலத் முதலி சொல்கிறர்:

## பந்தோபஸ்து நிதிக்குப் பணம் வழங்கினல் பயங்கரவாதத்துக்கு எதிர் என்று அர்த்தம்!

பெரும்பாலான தமிழ் மக்கள் பிரிவினையை விரும்பவில்லையாயினும், அதுபற்றிப் பகிரங்கமாகத் தெரிவிக்க அவர்கள் காலதாமதம் செய்துவிட்டார்களென்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

கண்டி வர்த்தகர்களால் தேசிய பந்தோபஸ்து நிதிக்கு பத்துலட்சம் ரூபா கையளிக்கப்பட்ட வைபவத்தில் உரை

— 2-ஆம் பக்கம் பார்க்க

### இருபாலையில் ராணுவ சோதனை

(இருபாலை)

நேற்றுப் பிற்பகல் இருபாலையில் இராணுவத்தினர் கடும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இங்குள்ள தனியார் கல்வி நிலையமொன்றுக்குள் நுழைந்த இவர்கள் அந்தப்பகுதி முழுவதையும்

—2-ஆம் பக்கம் பார்க்க

## நவீன 'பணய' நாடகத்தை இளைஞர் குழு முடித்தது

(உடுப்பிட்டி)

கரவெட்டி வதிரியில் இடம் பெற்ற இரு பணய நாடகங்கள் இப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தின இங்குள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராக பணிபுரியும் ஆசிரியர் ஒருவரிடம் பணம் கொடுத்து நீண்டநாட்களாகியும் பலன் கிடையாமல் ஏமாற்றமடைந்த இளைஞர்

—2-ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

## வடபகுதி கடல் கண்காணிப்புக்கு 200 கோடி ரூபா 'ராடர்' இயந்திரம்

வடபகுதிக் கண்காணிப்புப் பிரதேசத்துக்கென இருநூறு கோடி ரூபா செலவில் நவீன ''ராடர்'' இயந்திரமொன்றை இலங்கை அரசாங்கம் வாங்கத் தீர்மானித்துள்ளது. வடபகுதிக் கடற்பிரதேசத்துக்கூடாக தீவிரவாதிகளின் போக்குவரத்தைக் கண்காணிக்கவும், ஆயுதங்கள் வடக்கே கொண்டு வரப்படுவதைக் கண்டுபிடிக்கவும் நவீன 'ராடர்' இயந்திரம் பயன்படுத்தப்படும். கண்காணிப்புக் கடல் பகுதியின் மையப் பகுதியில் 'ராடர்' நிரந்தரமாக நிலை கொண்டு கண்காணிப்பு வேலையை மேற்கொள்ளும்.

### விசேஷ அனுமதிபெற பிரிகேடியருக்கு விண்ணப்பிக்கவேண்டும்:

# குடாநாட்டின் 8 வீதிகளில் காலையும், பிற்பகலும் வாகனங்களைச் செலுத்த அனுமதிபெறவேண்டும்

பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வாகனங்களின் உடைமைக்கும் அதன் பயன்பாட்டுக்குமான அதிகாரமளிக்கும் பத்திரங்களைவழங்குவதற்கான தகுதிவாய்ந்த அதிகாரிகளாக பலாலி ராணுவ முகாம் கேர்ணல் ஜெயவர்த்தனவும், யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஐ.ரி கனகரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாகனப்பதிவுப் புத்தகத்துடன் வாகன உரிமையாளர் அல்லது பாவனையாளர் தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் சென்று இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற முடியும்

விண்ணப்பங்கள் கையளிக்கப்படும்போது உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தினால் ஒப்புதல் கடிதமொன்று கொடுக்கப்படும் இந்தக் கடிதத்துடன் ஒருவாரத்துக்கு வாகனத்தைப் பாவிக்க முடியும். ஒரு கிழமையின் பின்னர், வாகனம் அதிகாரமளிக்கும் பத்திரம் வழங்கப்படும். குறிப்பிட்ட வீதியில் செல்வதற்கான நிறத்தாள் வாகனத்தின் முன் கண்ணாடியிலும், வானத்திலிருந்து பார்க்கக் கூடியவாறு வாகனத்தின் மேற்பகுதியிலும் ஒட்டப்படவேண்டும் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களைச் செலுத்துவர்கள் இவற்றைத் தம்முடன் எடுத்துச் செல்லல் வேண்டும்.

காலை 6 மணிக்கும் 8-30 மணிக்குமிடையில் கண்டி வீதி (சிவப்பு நிற லேபல்), காங்கேசன்துறை வீதி (நீலம்), சாரைநகர் மானிப்பாய் வீதி (பச்சை), குறிகட்டுவான், புங்குடுதீவு, வழுக்கையாறு வீதிகள் (சிவப்பு) ஊர்காவற்துறை பண்ணை வீதி (கறுப்பு), வசாவிளான் வீதி (வெள்ளை) பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய் வீதி (பச்சை) வழியாக யாழ்ப்பாணத்தை நோக்கி வரவும், பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை யாழ்ப்பாணத்திலிருந்து மேற் குறிப்பிட்ட பாதைகளால் திரும்பிச் செல்லவும் அனுமதிப்பத்திரங்களைப் பாவிக்க முடியும்.

குறிப்பிட்ட இந்த நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் வாகனங்களைப் பாவிக்க விரும்புவோர், தமது தேவையை விளக்கி யாழ்ப்பாணம் பிரிகேடியருக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஓடமுயன்ற இருவர் கைது

(கைதடி)

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கண்டிவீதி வழியால் ரோந்து சேவையில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் கைதடிச்சந்தியில் இரண்டு இளைஞர்களைக் கைது செய்தனர். இராணுவத்தினரை கண்டவுடன் ஓட முயற்சித்த போதே இவ் இளைஞர்கள் பிடிபட்டனர் என தெரிய வருகின்றது.

### நவீன...

— 1-ஆம் பக்கத் தொடர்

குழு ஒன்று ஆசிரியரின் புத்திரரைக் கடத்திச் சென்று பணயமாக வைத்திருந்தனராம் இதையடுத்து இப்பகுதியில் பதற்றம் நிலவியது.

சிலமணி நேரங்களின்பின் முகவரின் உறவினர்களால் ஆசிரியரின் மகனைக் கடத்திய கோஷ்டியில் ஒருவரது தகப்பனர் கடத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்டாராம்.

இந்த நாடகம் எப்படி முடியுமோ என்று இப் பகுதியில் பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டவேளை ''இளைஞர் குழு'' ஒன்றுவந்து விசாரணைகளை நடத்தி இருவரையும் விடுவித்ததாம். பணய நாடகம் இத்துடன் நிறைவுற்றது


### விற்பனைக்கு

சகல தச்சு வேலைகளும் செய்யக்கூடிய இரண்டு மோட்டார்களுடன் இயங்கும் மெஷின் விற்பனைக்கு உண்டு

நாதன் தச்சுத் தொழிற்சாலை
299 (497) K. K S. வீதி
யாழ்ப்பாணம்


### வங்காலை...

—1-ஆம் பக்கத் தொடர்

வாறு, செபமாலையுடன் நின்றபோதே சுட்டுக்கொல்லப்பட்டாராம். இவருடன் தங்கியிருந்த மானிப்பாயைச் சேர்ந்த அழகு (16) நாதன்குறூஸ் (18) ஆகிய இரு சிறுவர்களும் கூட கொலை செய்யப்பட்டனர். சிறுவர்களின் சடலம் ஆஸ்பத்திரியில் இருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன

மதகுருவின் சடலம் எரிக்கப்பட்டதாகவும் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்திருக்கும் செய்திகள் கூறுகின்றன இச்சம்பவத்தின்போது, ஆலயத்துக்கு அருகிலுள்ள பாடசாலை வளவுக்குள்ளிருந்த பெண்ணொருவரும், மற்றும் எட்டு இளைஞர்களும் மரணமாக நேர்ந்ததாம்

இராணுவத்தைத் தாக்க முயற்சித்த எட்டுப் பயங்கரவாதிகளை வங்காலையில் இராணுவம் கொலை செய்ததாகவும், இவர்களிடமிருந்து பல ஆயுதங்களையும், குண்டுகளையும் இராணுவம் மீட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது.

### சடலத்தை...

—1-ஆம் பக்கத் தொடர்

வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று இதுதொடர்பாக இங்கிருந்து அனுப்பப்பட்ட தந்தியில் இக்கொலை தொடர்பாக தாங்கள் மிகுந்த வேதனையடைந்திருப்பதாகவும் கொலையுண்ட மதகுரு யாழ். மறை மாவட்டத்தைச்சேர்ந்தவராதலால், யாழ்ப்பாணத்தில் சமயாசார முறைப்படி அடக்கம் செய்ய அவரது சடலத்தை தங்களிடம் ஒப்படைக்க ஆவன செய்யுமாறு மேற்றிராணியார் வண. பி தியோகுப்பிள்ளையும், யாழ் மறை மாவட்ட மதகுருமாரும் கேட்டுள்ளனர்.

திருமறைக் கலாமன்ற இயக்குனரும்மான வணபிதா பஸ்தியனின் கொலையைக் கண்டித்து கத்தோலிக்க பொது நிலையினர் சங்கத்தலைவர் டாக்டர் ஜே. பி. சி பிலிப்ஸ் விடுத்துள்ள அறிக்கையில், பயங்கரவாதிகள் என்ற பெயரில் சாதாரண பொது மக்களும், மதகுருமாரும்கண்டபடி கொலை செய்யப்படுவதை வன்மையாகக் கண்டித்துள்ளார்

## துர்க்கா துரந்தரி மணிவிழா இன்று

சிவத்தமிழ்ச்செல்வி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறுபதாண்டு நிறைவையொட்டி இன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மணிவிழா ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெறவுள்ளன இத்தினத்தில் கைதடி சைவச்சிறுர் இல்லம், திருநெல்வேலி முத்துத்தம்பி சைவச்சிறுர் இல்லம் வகிரிபரமானந்த ஆச்சிரமம் கிளிநொச்சி குருகுலம், நல்லை ஆதீனம், திருக்கேதீஸ்வரம், மயிலிட்டி மீனவர் சங்கம் ஆகிய இடங்களிலும் மதிய உணவு வழங்கப்படும்.

விழாவின் போது மணிவிழாச் சபைத்தலைவர் திரு வி. என் சிவராசா அவர்களால் நூல் ஒன்றும் வெளியிடப்படும்.

### ஜனதிபதியை...

—1-ஆம் பக்கத் தொடர்

டும் இவ்வாரம் கொழும்பு செல்வார் என்றும், வெள்ளிக்கிழமை ஜனதிபதி ஜெயவர்த்தனவைச் சந்திக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் திரு பாலசுப்பி மணியம் தெரிவித்தார். இம் மாதம் முதலாம் திகதி மேற்படி குழு ஜனதிபதிக்கு ஒரு மகஜரையும் அனுப்பியிருந்தது

கொழும்பில் பிரதமர் பிரேமதாசா, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. பீட்டர் கெனமன், திரு விஜயகுமாரணதுங்க, அமைச்சர்கள் அத்துலத்முதலி, ஏ. சி. எஸ் ஹமீட் ஆகியோரை இவர்கள் கடந்த வாரத்தில் சந்தித்துப் பேசினர்.

இன்றைய அரசாங்கம் தமிழ் மக்களை இந்தநாட்டுப் பிரசைகளாக நடத்துகின்றுர்களா என்ற சந்தேகம் இப்போது ஏற்படத் தொடங்கியிருக்கிறது என்ற கருத்தையே கொழும்பில் சந்தித்த ஒவ்வொருவரிடமும் தாங்கள் சுட்டிக்காட்டியதாக பிரஜைகள் குழுச் செயலாளர் தெரிவித்தார்

### இன்று ஜெனீவாவில் ஆரம்பம்

## ரஷ்ய அமெரிக்க மந்திரிகள் பங்குபெறும் பேச்சுக்கள்

(ஜெனீவா)

சர்வதேச அரங்கில் அதிமுக்கியத்துவம் பெறும் சோவியத் யூனியனுக்கும். அமெரிக்காவுக்கும் இடையிலான அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இன்று ஜெனீவாவில் ஆரம்பமாகின்றன.

சோவியத் யூனியன் வெளிவிவகார மந்திரி திரு குரோமிக்கோவும், அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு சூல்ட்ஸும் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கின்றனர்.

இப்பேச்சு வார்த்தைகள் நல்ல பலனளிக்கும் என்று றீகன் நிர்வாகம நம்புவதாக வாஷிங்டன் அறிக்கைகள் தெரிவிக்கின்றன

### ஈழத்தமிழர்...

—1-ஆம் பக்கத் தொடர்

வெற்றி அனுதாப உணர்விலானதல்ல நறைறியுடன் கூடியது'' கின்றுர்.

### திருப்பலி..

—1-ஆம் பக்கத் தொடர்

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாம். ஆயரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் கலந்துகொள்ளுமாறு அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

### பந்தோபஸ்து...

—1-ஆம் பக்கத் தொடர்

யாற்றுகையில் இதனை அமைச்சர் தெரிவித்தார்.

வடபகுதிமக்கள் தாம் பிரிவினைக்கு ஆதரவில்லை என்பதை அடிக்கடி தெரிவிக்க வேண்டுமென்றும் தேசியபந்தோபஸ்து நிதிக்கு பணமளிக்கும் ஒருவர் தாம் பயங்கரவாதத்தை எதிர்ப்பவரென்று தெரிவிக்கிறுரென்றும் சொன்ன அமைச்சர் வன்செயல்கள் மூலம் எதனையும் சாதிக்கமுடியாதென மக்கள் தீவிரவாதிகளுக்குணர்த்தியுள்ளார்களென்றும் இங்கு தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

## யாழ் தேவி 5 மணி தாமதம்

நேற்று கொழும்பில் இருந்து வந்த யாழ் தேவி சுமார் ஐந்து மணி நேரம் தாமதித்து மாலை ஐந்து மணிக்கே கிளிநொச்சிக்கு வந்தது

### தமிழக மந்திரி...

—1 ஆம பக்கத் தொடர்

இதேவேளை தமிழக முதல்வர் சென்றவாரமே புறூக்லின் மருத்துவ மனையிலிருந்து ''டிஸ்சார்ஜ்'' ஆகியிருக்க வேண்டுமென்றும் ஆனல் அவரது துணைவியார் ஜானகியினது வேண்டுகோளின் பேரிலேயே அவர் தங்கியிருக்கும் நாட்கள் நீடிக்கப்பட்டனவென்றும் புறூக்லின் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

### இருபாலையில்...

—1-ஆம் பக்கத் தொடர்

நுணுக்கமாகச் சோதனையிட்டனர். அதனைத் தொடர்ந்து நாலாபக்கங்களிலும் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். இதனல் பருத்தித்துறை பஸ் சேவைகள் சில மணி நேரம் இராச பாதையால் நடைபெற்றது. உயிர் சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.


## மரண அறிவித்தல்

### கதிர்காமர் தாமோதரம்பிள்ளை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 71/9A அரசடி வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர் தாமோதரம்பிள்ளை அகால மரணமானூர். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியை கிருஷ்ணம்மாவின் அன்புக் கணவரும் இராதாகிருஷ்ணன் (ரேரு லிமிட்டெட்) இராதாலெட்சுமி பாலகிருஷ்ணன் (லண்டன்) இராமகிருஷ்ணன், ஞானகிருஷ்ணன் என்போரின் அன்புத் தந்தையும் வாசுகி (சட்டத்தரணி) சச்சிதானந்தம் (பொறியியலாளர் லண்டன்) ஆகியோரின் மாமனுருமாவார் இவர் காலஞ்சென்ற முத்துவேலு கொழும்பு பிரபல வர்த்தகர்கள் பொன்னம்பலம் ஆறுமுகம் மார்க்கண்டு ஆகியோரின் சகோதரரும் கதிர்காமர் வள்ளியம்மையின் அன்புப் புதல்வரும் சின்னையா, நாகாத்தைப்பிள்ளையின் மருமகனுமாவார். ஈமக்கிரியைகள் 8-1-85 செவ்வாய் காலை 10.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

(2144)


'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 7, சண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 7-1-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.